# யாழ்நகர் இரவு 10 மணி வரை இயங்கும்

பக்கங்கள் ஆறு · விலை ரூபா: 3·00

முரசொலி

முரசு 04 ஒலி 02 செவ்வாய் 06-02-1990 (தை 24) றஜபு 09

## வர்த்தக நிலையங்கள் திறக்கும் பஸ் சேவைகள் நடக்கும்

யாழ்நகரில் வர்த்தக ஸ்தாபனங்கள், கடைகள் ஆகிய வற்றை இரவு பத்து மணி வரை திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரியவருகின்றது அடுத்த வாரம் முதல் காலை பத்து மணிக்கு கடைகள் திறக்கப்பட்டு இரவு 10 மணிக்கு மூடப்படுவதற்கும், இதற்கேற்ப தனியார், அரச பஸ் சேவைகளின் சேவை நேரம் நீடிக்கப்படவும் முயற்சிகள் நடை பெறுவதாகத் தெரிய வருகிறது. தற்போது யாழ்நகரில் மாலை ஏழு மணியுடனே கடைகள் மூடப்படுவதனையும் பஸ் சேவைகள் நிறுத்தப்படுவதனையும் காணக் கூடியதாக உள்ளது.

# விடுதலைப்புலிகள் - இலங்கைப்படை

# கிழக்குப் பகுதியில் முறுகல் நிலை

## கிழக்கில் எந்தவொரு தமிழ்க் குழுவும் ஆயுதம் தாங்க இலங்கை அரசு தடை

[கொழும்பு]

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்படக்கூடிய முறுகல் நிலை ஒன்று தோன்றியுள்ளதாக கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கில் எந்த ஒரு தமிழ் குழுவும் ஆயுதம் தாங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

— 6 ஆம் பக்கம் பார்க்க

## லண்டன் என்று நேபாளத்தில் 11 தமிழர் இறக்கிவிடப்பட்டனர்

(காட்மண்டு)

லண்டன் அழைத்துச் செல்வதாக கூறி பதினைந்து இலங்கைத் தமிழரை ஏமாற்றி நேபாளத்தில் இறக்கிவிட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த தரகர் ஒருவர் ஒவ்வொருவரிடமும் இருந்து இருபத்தையாயிரம்ரூபாவைபெற்றுக்கொண்டு அவர்களை லண்டன் அழைத்துச் செல்வதாகக் கூறி நேபாளத்தில் கொண்டு சென்று இறக்கி விட்டார்.

இப்போது ஏமாற்றப்பட்ட பதினைந்து இலங்கைத் தமிழரையும் நேபாள அரசு கைது செய்து இந்தியாவுக்கு மீண்டும் அனுப்பிவிட்டதாக தெரியவருகிறது.

## காங்கேசன்துறையில் மோதல் ஒருவர் பலி மற்றொருவர் காயம்

காங்கேசன்துறையில், நேற்று நண்பகல் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு மோதல் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றொருவர் காயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதையடுத்து கடையிலிருந்து எட்டிப்பார்த்த தேநீர் கடை ஊழியரே கொல்லப்பட்டவராவர். அருகிலிருந்த பெற்றோல் நிலையத்தில் வேலை செய்யும் இளைஞருக்குக் காலில் காயம் ஏற்பட்டது.

— 6 ஆம் பக்கம் பார்க்க

## சர்வஜன வாக்கெடுப்பு

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான சர்வசன வாக்கெடுப்பு எதிர்வரும் ஜூன் 14ஆந் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அரச வர்த்தமானியில் அறிவித்துள்ளார்.

## லண்டன் வைத்தியசாலையில் முன்னாள் தளபதி கிட்டு அனுமதி

தமிழீழவிடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ். பிராந்தியத் தளபதி கிட்டு கடந்த 24ஆந் திகதி லண்டனில் உள்ள குவின்ஸ் பெரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவருக்கு 'எலக்ரோனிக்' செயற்கைக் கால் அங்கு வைத்து பொருத்தப்படவுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் – இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளில் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், யோகி ஆகியோருடன்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## ஆட்டோ, ராக்ஸி உரிமையாளர் வர்த்தகர்கள் - புலிகள் சந்திப்பு

இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ். வர்த்தகர்கள், ஆட்டோ, ராக்ஸி உரிமையாளர்கள் விடுதலைப் புலிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் சகல வர்த்தக நிறுவன உரிமையாளர்களும், ஆட்டோ, ராக்ஸி உரிமையாளர்களும் கலந்துகொள்ளுமாறு வர்த்தக சங்கம் கேட்டுள்ளது.

— 6 ஆம் பக்கம் பார்க்க

## 117000 அமெரிக்க டொலருடன் மாதகல் கடலில் வள்ளம்

மாதகல் கடல்பகுதியில் கரையில் இருந்து நான்கு மைல் தொலைவில் வைத்து வள்ளம் ஒன்றை நேற்றுமுன்தினம் இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வள்ளத்தில் ஒருலட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று ஐம்பது அமெரிக்க டொலர்கள் காணப்பட்டதாகவும், வள்ளத்தில் இருந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சி கடற்பகுதியில் இலங்கை ஹெலி நோட்டம்

(உடுப்பிட்டி)

வடமராட்சிக் கடற் பகுதியில் ஸ்ரீலங்கா ஹெலிகப்டர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, பொலிகண்டி, தொண்டமானாறு போன்றகடற் பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா ஹெலிகள் தாளப் பறந்து நோட்டமிட்டு வருகின்றமை சிலதினங்களாக அவதானிக்கப்படுள்ளது.

## வட. கிழக்கு மாவட்டரீதியில் ஆசிரியர் இடமாற்றபெயர் விபரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற பதினொரு ஆசிரியர்களின் விபரம் வருமாறு,

எஸ் ராஜரட்ணம், ஆர். புவனேந்திரன், திருமதி எஸ். விமலாதேவி, திருமதி எஸ். மகேந்திரராஜா, ரீ. பாலகிருஷ்ணன், எஸ். சிறிகதிர்காமநாதன், செல்வி ஜி. சின்னத்தம்பி, செல்வி எஸ். சின்னத்தம்பி, எஸ். சண்முகநாதன், திருமதி ஆர். குலராணி, ஏ. தம்பிப்பிள்ளை.

— 6 ஆம் பக்கம் பார்க்க

### யாழ். மாவட்டத்தில்

## மேலும் 200 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூ. நிவாரணம்

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை கடும்பாதிப்படைந்த நூற்றி இருபத்தி ஆறு குடும்பங்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பாதிப்பினதும் குடும்பவருமானத்தினதும் அடிப்படையில் வழங்கப்பட்ட இந்த நிவாரணக் கொடுப்பனவு மேலும் இரு

— 6 ஆம் பக்கம் பார்க்க

## காவலிலிருந்த மாணவர்கள் விடுதலை செய்யப்படவில்லை

இலங்கையின் நாற்பத்திரண்டாவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஆயிரத்திஐந்நூறு கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

அதே நேரம் தெற்கில் நாசகார சக்திகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பாடசாலை மாணவர்களை விடுதலை செய்வது என்ற யோசனை கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது.

இம் மாணவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் இவர்களை அழைத்துவரச் சென்ற பெற்றோர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

## தமிழ் மொழிபெயர்ப்பாளர் இல்லாததால் தமிழ் எம். பிக்களின் கேள்விகள் குப்பையில்

இலங்கைப் பாராளுமன்றத்தில் போதியளவு தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாததனால் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் எழுப்பப்பட்ட பலகேள்விகள் சபையின் எடுக்கப்படாமல் தேங்கிக்கிடப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. பலஉறுப்பினர்கள் தமது பிரதேச மக்கள் மற்றும் பொதுவிடயங்கள் தொடர்பாக பல கேள்விகளை எழுப்பியிருந்தும் இதுவரை முழுக்கேள்விகளும் ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெறவில்லையெனவும் அதற்கான பதில்களை பெறமுடியாதிருப்பதாகவும் பல உறுப்பினர்கள் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக கூடியகவனம் செலுத்தப்படும் என சபாநாயகர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ் அச்சடிக்கும் காட்டுகள் பிறந்தநாள் வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்கள் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிசட்கு விசேஷ கழிவுண்டு. விபரங்கட்கு ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சாரநிலைய வீதி, பஸ் நிலையம், முன்புறம், யாழ்ப்பாணம். 02013


## வேலை ஆரம்பம்

(கோப்பாய்)

நீண்டகாலமாகத் தடைப்பட்டிருந்த மின்சார திருத்த வேலைகள் கோப்பாய் அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்படி யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியில் மின்சாரக் கம்பங்களில புதிதாக ரியூப்லைட்டுக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதான வீதியில் ஒழுங்கைச் சந்திகளில் மேக்கூறி லைட்டுக்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளை மின்சார அதிகாரி திரு. ச. சண்முகரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் உரை:

# முஸ்லிம மக்களின் ஒற்றுமை புலிகளின் இலட்சியத்திற்கு அத்தியாவசியமானது

'யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் ஆரம்பப்பாடசாலை யாழ்ப்பாண முஸ்லிம் மாணவர்களுக்கு வசதியான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு நூற்றிமுப்பத்தைந்து பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். இவ் ஆரம்பப்பாடசாலை எதற்காக மூடப்படவேண்டும்? இப்பாடசாலையில் இது வரை காலமும் அதிபரும் ஆசிரியர்களும் பாதிப்படைந்து வந்தார்கள். இன்று மாணவர்களும் பாதிப்படைந்து விட்டார்கள்'

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசிய கல்லூரியின் உப அதிபர் திரு. கே. சாவுல்ஹமீட் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு பேசுகையில்:

'பெரியபெரிய பாடசாலைகள் எல்லாம் ஆரம்பப் பாடசாலையை வைத்திருக்கும் போது இக் கல்லூரிமட்டும் எதற்காக வைத்திருக்கக் கூடாது. முஸ்லிம் சமூகத்தினரின் இந்த வேண்டுகோளை கல்வித் திணைக்களம் ஏன் புறக்கணிக்கிறது என்பது புரியவில்லை என்றார்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசுகையில் ''எம்மைப் பொறுத்தவரை நாம் எந்த சமுதாயத்திற்கும் எதிரானவர்கள் அல்ல. விடுதலையை நேசிப்பவர்கள் நாம்: எமது விடுதலைப் போராட்டத்தில் இவ்விடயம் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலேயே இவ்விடயத்தில் நாம் பங்கெடுக்கின்றோம்.

பெற்றோர்கள், பாடசாலை நிர்வாகத்தினர், பழைய மாணவர்கள், பொதுமக்கள் யாவரும் ஒன்று திரண்டு விடுக்கும் இக் கோரிக்கையை நாம் மேலாக மதிக்கின்றோம். முஸ்லிம் மக்களின் ஒற்றுமை எமது இலட்சியத்திற்கு அத்தியாவசியமானதொன்றாகும். தனிப்பட்ட விரோத நடவடிக்கைகள் எதற்கும் நாம் தலைசாய மாட்டோம். மக்களின்நலனுக்காக நாம் என்றும் பாடுபடுவோம்.

உங்கள் சமூகம் ஒன்றுதிரண்டு ஒற்றுமையுடன் இப் பிரச்சனையை அணுநவதால்நிட்சயம் நாம் எமது பிரதேச வளர்ச்சிக்காகவும், கல்வி மேம்பாட்டுக்காகவும் உரிய நடவடிக்கையை விரைவில்எடுப்போம்.

தமிழ் முஸ்லிம் ஒற்றுமை தேவையென நாம் என்றைக்கும் வலியுறுத்தி வருகின்றோம். அரசியல் லாபங்களுக்காகவும் எமது போராட்டத்தை நசுக்குவதற்கு முஸ்லிம்களை எம்முடன் வெறுப்படைய வைக்கின்றார்கள். இதன் ஓர் அத்தியாயமே கல்முனை அம்பாறைக் கலவரமாகும். இது வேண்டுமென்று துரோகிகளால் மேற்கொள்ளப்பட்ட சதியாகும். தமிழ் முஸ்லிம் தலைமைகள் அனைத்தும் பதவி வெறிபிடித்த பச்சோந்திகளாகும். எனவே இன மத பேதமற்ற தலைமையின் கீழ் நாமெல்லாம் ஒன்றிணைவோம். சிங்கள மக்கள் கூட இன்று எம்மை தேசபக்தர்கள் என்று புரிந்துள்ளார்கள்' என்றார்.

மற்றும் இக் கலந்துரையாடலில் பாடசாலை நடவடிக்கைக் குழு அங்கத்தவர் திரு. சுல்தான், பழைய மாணவர் சங்க உப தலைவர் எம். ஏ. சி. முபீன் ஆசிரியர் ஜெமில் ஆகியோர் உரையாற்றினார்கள். பெற்றோர்கள் தமது நியாயமான கருத்துக்களை நேரடியாக விடுதலைப்புலிகளிடம் தெரிவித்தார்கள். அத்துடன் ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்து வரையான மாணவர்களின் பெற்றோர்கள் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்றும் விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது.


# கனடாவில் வேலைவாய்ப்புக்கள்

| | VACANCIES | | SALARY | |
|---|---|---|---|---|
| 1. | கணக்காளர்கள் | Accountants | 1170 | CD |
| 2. | கணக்குப்பதிவாளர்கள் | Book-Keepers | 900 | CD |
| 3. | இரசாயனவியலாளர்கள் | Chemists | 960 | CD |
| 4. | எழுதுவினைஞர்கள் | Clerks | 840 | CD |
| 5. | சாரதிகள் | Drivers | 850 | CD |
| 6. | பொறியியலாளர்கள் | Engineers | 1340 | CD |
| 7. | எலெக்ரீஷியன்கள் | Electricians | 1110 | CD |
| 8. | போர்மன்கள் | Foremen | 1020 | CD |
| 9. | தொழிலாளர்கள் | Labourers | 750 | CD |
| 10. | மெக்கானிக்குகள் | Machinists | 800 | CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்களுக்கும் ஏனைய விபரங்களுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பமுடிவுத்திகதி 28. 2. 1990

**AXONT AGENCY**

370, Point Pedro Road

Anaipanthi

Jaffna,

[வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்] 02021


## கட்டாக்காலிகள் நஞ்சூட்டிக் கொலை

(உடுப்பிட்டி)

மந்திகை அரசினர் வைத்தியசாலை வளவில் கட்டாக்காலிகளாகத் திரிந்த நாய், பூனைகள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டுள்ளன.

மேற்படி வைத்திய சாலைப் பகுதியில் இவற்றின் அதிகரிப்பால் நோயாளர்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டு வந்தமை சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

## நவீன பஸ்வண்டி யாழ். சேவையில்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண சாலைக்கு பிரிட்டிஷ் உதவியுடன் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட பஸ் வண்டியொன்று மத்திய போக்குவரத்துச்சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ். - மட்டுநகர் சேவையிலீடுபட்டிருந்த சமயம் விபத்துக்குள்ளாகி சேதமடைந்த 29 சிறி 8580 இலக்கமுடைய பஸ் வண்டிகளே மத்திய போக்குவரத்துச்சபை வேலைத்தளத்தில் வைத்து பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட உடற்பொறி யொருத்தப்பட்டுள்ளது.

## புதிய அதிபர் நியமனம்

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் இந்து தமிழர் கலவன் வித்தியாலயத்தின் அதிபராக திரு. சி. வி. குணசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார். கலைப்பட்டதாரியான இவர் சிறந்த வானொலி நாடக எழுத்தாளரும், சமூக சேவையாளரும் இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவரும் ஆவர்.

## ஆலயத்துக்கு சுற்றுமதில்

(சுன்னாகம்)

சருகப்பனை கவுணாவத்தை ஆலயத்திருப்பணிகளும், சுற்றுமதில் அமைக்கும் பணியும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

# இலங்கைத் தமிழருக்கு லண்டனில் கௌரவம்

மட்டக்களப்பை தாயகமாகக் கொண்ட டாக்டர் ஒருவர் ஆங்கில சொல்வளத்திறமையில் பிரிட்டன் ஆங்கிலேயர்களையே மிஞ்சியுள்ளார். டாக்டர் ஆர். யோகசாகரர் என்பவரே பிரிட்டன் பி பி சி டெலிவிஷன் ஆண்டுதோறும் நடாத்திவரும் போட்டியொன்றில் 1989 ன் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டவராவர். 'கவுன்ட்டவுன்' எனப்படும் இந் நிகழ்ச்சி போட்டியிடுபவர்களின் ஆங்கில சொல்வளத்திறமையையும் மனக் கணிதத் திறமைகளையும் சோதிக்கின்றது. ஒரு வருடம் பூராக பல போட்டிகள் நடாத்தப்பட்டு கால்இறுதி அரையிறுதி போட்டிகள் நடைபெற்றே சாம்பியன் தெரிவு செய்யப்படுவர். 1989 ல் போட்டியிட்ட ஒரேஒரு ஆசியக் குடிமகனும், இந்தசாம்பியன் பட்டத்தை முதன் முதலில் பெற்ற ஆசியக் குடிமகனும் இவரேயாவர். இவரது வெற்றி இலங்கை மக்களுக்கு மட்டுமல்ல ஆசிய குடிமக்கள் அனைவருக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும். மட்டக்களப்பு ராஜரட்ணம் தம்பதிகளுக்கு பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பிலும் உயர்கல்வியை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் மேற்கொண்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் டாக்டராகப் பட்டம் பெற்று அறுவைச்சிகிச்சைநிபுணராக இலங்கையில் கடமையாற்றிய இவர் தற்போது பிரிட்டன் மக்கிள்ஸ்பீல்ட் நகரில் அறுவைச் சிகிச்சை நிபுணராக கடமையாற்றி வருகிறார்.


# கம்பியூட்டர் கல்வி

★ Diploma in Data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம் 07-Feb-90 (திங்கள்,புதன்,வெள்ளி)

10-Feb-90 (சனி,ஞாயிறு)

நேரம்: 9 am

★ dBase III+

ஆரம்பம் 15-Feb-90 (செவ்வாய், வியாழன், வெள்ளி) நேரம்: 9.30 a.m

23-Feb-90 (சனி, ஞாயிறு)

நேரம்: 10.30 a m

★ Lotus 1-2-3

ஆரம்பம் 11-Feb-90 (சனி, ஞாயிறு)

நேரம்: 10 a m

★ Word Processing

ஆரம்பம் 10-Feb-90 நேரம் :9 a m

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, 2nd Lane,

Power House Road,

Jaffna. 02020



# Accountancy Exams JUNE - 1990

IAB All Stages

IDPM Part I

Part II

AAT Sri lanka

Stage I and

Stage II

ஆரம்பம்: 09-02-1990

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**

14, St Peters Lane

Hospital Road, Jaffna 02009

# தமிழ் முஸ்லிம் ஒற்றுமை அவசியம்

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின்போது தமிழ் மக்களுக்குப் பல சலுகைகளை ஆங்கிலேயர் வழங்கினர்.

தமிழ் மக்கள்மேல் கொண்ட அக்கறை, அனுதாபத்தால் ஆங்கிலேயர் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

அன்று இலங்கையில் இருந்த சுதந்திர வேட்கையைத் திசைதிருப்பவே தமிழர்களுக்கு அதிக சலுகைகளை ஆங்கிலேயர் வழங்கினர்.

இதன் மூலம் இலங்கையின் பெரும்பான்மை இனமக்களைத் தமிழர்பால் வெறுப்படைய வைத்தனர்.

சுதந்திர வேட்கையுடைய ஒரு பெரும் பகுதியினரைத் திசைதிருப்பினர்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் பின், நாம் சுதந்திரம் பெற்ற பிற்பாடு இந்நிலை மாற்றியமைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகினர்.

அவர்களைத் திசைதிருப்புவதற்காக அவர்களை முஸ்லிம் மக்கள்மீது வெறுப்படைய வைக்கும் சதியை ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகட்டும், ஐக்கிய தேசியக் கட்சியாகட்டும், ஆளுங்கட்சியாக இருந்தபோது இரண்டுமே இதுவிடயத்தில் கவனமாக இருந்தன.

## இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 06.02.1990

நீங்கள் எந்த அளவையினால் அளப்பீர்களோ அந்த அளவுக்குத் திரும்ப அளிக்கப்படுவதுடன் கூடவும் கொடுக்கப்படும்

- பைபிள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தமிழ் மக்களுக்கு எதிரான சட்டமூலங்கள், நடைமுறைகள் முஸ்லிம் அதிகாரிகள் மூலமே செயற்படுத்தப்பட்டன.

இதனால் எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல் முஸ்லிம்களைத் தமிழர்கள் நோகத் தொடங்கினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் கல்வியமைச்சராக ஒரு முஸ்லிம் பிரமுகரை நியமித்து அவர் மூலமாக தமிழ் மாணவர்களுக்கு எதிரான தரப்படுத்தலை அரசு அமுல் செய்தது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக முஸ்லிம் பிரமுகரை நியமித்தது.

தமிழீழ போராட்டம் உச்சக்கட்டமடைந்து உலகநாடுகளின் கவனத்தைக் கவர்ந்திருந்த நேரம், அரசு முஸ்லிம் அமைச்சர் மூலம் அதற்கெதிரான பிரசாரங்களை முன்வைத்து தமிழ் மக்களின் எதிர்ப்பை முஸ்லிம் மக்கள்மேல் திசைதிருப்பியது.

அவ்வப்போது தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வுகள் அதிகரித்தபோதெல்லாம் தமிழ், முஸ்லிம் கலவரங்களைக் கிழக்கில் தூண்டிவிட்டது.

இதனால் தமிழர்களுக்கு முஸ்லிம்கள் மேல் ஒரு வெறுப்புணர்வைத் தோற்றுவிக்கவும், முஸ்லிம்களுக்கு தமிழர்பால் ஓர் அச்சத்தை ஏற்படுத்தவும் முயற்சித்தது.

இப்படியான முயற்சிகள் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமைமீது அக்கறை கொண்டுள்ளவர்களால் அவ்வப்போது முறியடிக்கப்பட்டுவந்துள்ளன.

இருந்தும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் புரிந்துணர்வு குறைந்து வருவதை அண்மைக்காலச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தற்போது உள்ள நிலமையின் வெப்பம் தணிக்கப்பட்டுவிட்டதாகக் கிழக்கிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இருந்தும் அந்த நெருப்பு முற்றாக அணைக்கப்பட்டுவிட்டதா என்பது கேள்விக்குறி!

தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான வெறுப்புணர்வு நீறு பூத்த நெருப்பாகக் காணப்படுவதாகத் தெரிகிறது.

சந்தர்ப்பவாதிகளால் விசிறிவிடப்படும்போது அது மீண்டும் கொழுந்துவிட்டெரிய தொடங்கும் என்பதில் ஐயமில்லை.

இது விடயத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையில் அக்கறையுள்ளவர்கள் விழிப்பாக இருந்து செயலாற்ற வேண்டும்.

# தையல் இயந்திர ரசீது ஒன்றே விஜேவீராவை காட்டிக் கொடுத்தது

ஜூலை மாதம் 1983 ஆம் ஆண்டு இலங்கை இனக்கலவரத்தின் உச்சக்கட்டத்தையடுத்து ஜே.வி.பி. ஜெயவர்த்தன அரசினால் தடைசெய்யப்பட்டது இவ்வறிவித்தல் வானொலியில் அறிவிக்கப்பட்டபோது ரோகண விஜேவீர மொரட்டுவையில் மனைவியின் வீட்டில் தங்கி இருக்கிறார். வானொலிச் செய்தி கேட்டுக் கோபமடைந்த விஜேவீர அன்று மாலையிலேயே தங்காலைக்குத் தன் மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடன் தப்பிச் சென்றார்.

தங்காலைக்குச் சென்ற விஜேவீர அங்கு மனைவியையும் தன் இரு பிள்ளைகளையும் விட்டு பண்டாரவளைக்குப் பயணமானார். பண்டாரவளையில்தான் ஜே.வி.பியின் ஏனைய பொலிட்பீரோ உறுப்பினர்கள் அப்போது தங்கியிருந்தனர்.

ஆறு மாதங்கள் ஓடி விட்டன. ஜனவரி 1984 ஆம் ஆண்டு ரோகண விஜேவீரவின் மூத்த மகளின் பிறந்த நாள்... பிறந்தநாள் வைபவங்களுக்காக தங்காலையில் தங்கியுள்ள தனது குடும்பத்தினரை அழைத்து வருமாறு தனது உறுப்பினர்களை விஜேவீர பணித்தார். பண்டாரவளை வந்து சேர்ந்த மனைவியும், பிள்ளைகளும் இரு நாட்கள் விஜேவீரவுடன் தங்கியிருந்தனர். இதன் பின் மனைவியும், பிள்ளைகளும் நுவரேலியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கிருந்து சில மாதங்களின் பின்னர் அவர்கள் தங்காலைக்கு மீண்டும் சென்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் விஜேவீரவின் மனைவி கர்ப்பம் உற்றதாகக் கூறப்பட்டது. இவ்வேளையில் தென் மாகாணம் எங்கும் கர்ப்பம் உற்ற மனைவியை பிரிந்து வாழும் விஜேவீராவைக் கண்டித்து சுவரொட்டிகள் பரவலாகக் காணப்பட்டன. இதனால் ஜே.வி.பியில் உள்ள மூத்த தலைவர்கள் மனைவியைத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு விஜேவீரவை வற்புறுத்தத் தொடங்கினர்.

ஒன்றேகால் லட்சம் பெறுமதியான வீடொன்றை ஜே.வி.பி. உறுப்பினரான வங்கி அதிகாரி ஒருவரிடம் ஜே.வி.பி நிதியில் விஜேவீர பெற்றுக் கொண்டார். வலகப்பத்தனையில் உள்ள இந்த வீட்டுக்கு விஜேவீரவின் குடும்பம் குடியிருக்கச் சென்றது. இங்கு இருக்கும் போது கிராமத்தில் தாம் ஒரு இரத்தினக்கல் வியாபாரி எனவும், முன்பு குடிகாரனாக இருந்ததாகவும் நடித்துக் கொண்டார்.


எனினும் மாதமிருமுறை ஜே.வி.பியின் மற்றோர் உறுப்பினருடன் கட்சியின் அரசியற் குழுக் கூட்டங்களுக்கு நழுவிச் சென்று விடுவார். அங்கு சில தினங்கள் தங்கியிருந்துவிட்டு மீண்டும் வலகப்பத்தனைக்கே திரும்பி விடுவார்.

அரசியற் குழுக் கூட்டங்களுக்கு விஜேவீர செல்லும் காலங்களில் அவரது குடும்பத்தினரைக் கவனித்துக் கொள்ள இரு ஜே.வி.பி பெண் உறுப்பினர்கள் அவ்வீட்டில் தங்கியிருந்தனர். இவர்களே சமையல் நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டனர்.

1986 இன் முற்பகுதியில் ஒரு சமயம் விஜேவீரவின் மனைவியும், பிள்ளைகளும் தங்கியிருந்த வலகப்பத்தனை வீட்டைப் பொலிஸார் சோதனையிட்டனர். எனினும் சந்தேகத்திற்கு இடமாக எதுவும் இல்லாததால் பொலிஸார் சென்றுவிட்டனர். இவ்வேளை விஜேவீர பொலிட்பீரோ கூட்டத்திற்காக சென்றுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இச்சம்பவம் ஜே.வி.பி மூத்த உறுப்பினர்களிடையே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியது.

இதனால் லுவேவகொட என்னும் இடத்துக்கு தப்பிச் சென்றுவிட விஜேவீர தீர்மானித்தார் அங்குஇரத்தினக்கல் வியாபாரி என்ற வேஷத்தில் சென்ற விஜேவீர ஜே.வி.பி நிதியில் 13 லட்சம் ரூபாவுக்கு வீடொன்றை வாங்கினார்.

லுவேவகொட வீட்டில் பொலிபீட்ரோ கூட்டங்கள் அடிக்கடி நடைபெற்றது. அத்தநாயக்க என்ற பொய் பெயரில் விஜேவீர அங்கு ஆடம்பர வாழ்க்கையை நடாத்தினார். இங்குதான் விஜேவீரவின் மனைவி இரு குழந்தைகளை பெற்றெடுத்தார் இவற்றில் ஒரு குழந்தை பதுளையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் பிறந்தது மட்டுமன்றி விஜேவீரவின் மனைவி சில சமயங்களில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கும் வந்து வைத்திய நிபுணர்களிடம் சிகிச்சையும் பெற்றுவந்தார்.



இவ்வேளையில் ஒருநாள் விஜேவீர தங்கியிருந்த லுவேவகொட வீட்டுக்கு ஜீப் ஒன்று இனந்தெரியாதவர்களால் ஓட்டி வரப்பட்டது வீட்டருகில் வந்த ஜீப்பில் இருந்தவர்கள் விஜேவீரவின் வீட்டைப்பற்றி சிலரிடம் விசாரித்தனர். வீட்டில் உள்ளவர்களின் விபரங்களையும் அவர்கள் விசாரித்தனர். எனினும் மர்மமான முறையில் அந்த ஜீப் மீண்டும் திரும்பிச் சென்று விட்டது.

இச்சம்பவத்தையடுத்து விஜேவீர குடும்பம் பாதுகாப்பில் உள்ள ஒரு அரச ஊழியரின் வீட்டில் தஞ்சம் புகுந்தனர். இவ்வீட்டில்தான் ரோகண விஜேவீர கைதுசெய்யப்பட்டபின் விஜேவீரவின் மனைவி தங்கியிருந்து பின் இராணுவ தளபதியிடம் சரணடைந்தார்.

விஜேவீரவின் தாயாரும் இங்கு வந்து தங்கினர். எனினும் ஜே.வி.பியினரின் படுகொலைகள் அதிகரித்ததினால் விஜேவீர தனது தாயாரை தென்மாகாணத்துக்கு அனுப்பி விட்டார்.

எனினும் இங்கிருந்தும் ஜே.வி.பி. மூத்த உறுப்பினர் சோமவன்ச அமரசிங்கவின் ஆலோசனையின் பேரில் கண்டியில் உலப்பனை பகுதியில் சென். ஜெம்ஸ் எஸ்டேட் ஒன்றை விஜேவீர வாங்கினார் இத்துடன் புதிய வீட்டுக்கு தளபாடங்களும், வாகனம் ஒன்றும் வாங்கப்பட்டது.

லுவேவகொடவில் கல்வி பயின்றுகொண்டிருந்த தனது மகள்மாரையும் விஜேவீர உலப்பனையில் உள்ள ஒரு கொன் வென்ட் பாடசாலையில் சேர்ப்பித்தார்.

இலங்கை இராணுவம் தனது நடவடிக்கைகளை கடுமைப்படுத்தியதையடுத்து விஜேவீரவின் குடும்பத்தினர் சுதந்திரமாக நடமாட முடியாது திண்டாடினர். இதனால் அவர்கள் மீண்டும் லுவேவகொடவிற்கே திரும்பத் தீர்மானித்தனர்.

சில சந்தர்ப்பங்களில் விஜேவீரவின் குடும்பம் காரில் செல்லும்போதுபல இராணுவ தடை முகாம்களை தாண்டிச் செல்ல நேரிடும். அப்போது சோதனையிடவரும் இராணுவத்தினர் ஐந்து பிள்ளைகள் மனைவியுடன் செல்வதினால் விஜேவீரவின் காரை செல்ல அனுமதித்து விட்டு விடுவர்!

இலங்கை இராணுவத்தினர் ரோகண விஜேவீரவை கைது செய்வதற்கு ஒருநாள் முன்னதாகவே ஜே.வி.பி உபதலைவர் கமநாயக்காவிஜேவீராவை உலப்பனையில் உள்ள வீட்டுக்கு செல்ல வேண்டாம் என எச்சரித்திருந்தார். லுவேவகொட வீட்டை இராணுவம் சோதனையிட்டுள்ளது எனவே உலப்பனைக்கு செல்வது ஆபத்தாகலாம் என கமநாயக்ககூறினர்.

ஆனால் ரோகண விஜேவீர கமநாயக்காவின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது உலப்பனையிலேயே தங்கினர்.

இதே சமயம் லுவேவகொட வீட்டை சல்லடைபோட்டு தேடிய இராணுவத்தினர் தையல் இயந்திரம் ஒன்றை வாங்கியதற்கான ரசீது ஒன்றைக்கண்டு எடுத்தனர். (ரோகண விஜேவீர தனது மகளுக்கு வாங்கிய சிங்கர் தையல் இயந்திர ரசீதை லுவேவகொட வீட்டில் மறதியாக விட்டுவிட்டார்.)

இந்த ரசீதில் வாங்கியவர் பெயர், விலாசம் இருந்தது. விலாசம் உலப்பனை என்றே இருந்தது. கண்டி ரசீது பண்டாரவளை வந்தது குறித்து சந்தேகம் கொண்டு பாதுகாப்புப் படையினர் உலப்பனைக்கு விசேட பிரிவு ஒன்றை அனுப்பினார்கள். அப்பிரிவினர் உலப்பனைக்கு வந்தனர். விஜேவீராவைக் கண்டனா கைது செய்து கொழும்பு

...5-ம் பக்கம் பார்க்க

## சடலம் புதைக்கப்பட்ட பின்பே ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது

ரோகண விஜேவீர கைது செய்யப்பட்டு ஒருநாள் கழிந்த பின்னர் அவர் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டதை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன அறிவித்தார். இவரைத்தவிர வேறு எவருக்கும் இந்தச்சம்பவம் தெரியவரவில்லை. விஜேவீர அடக்கம் செய்யப்பட்டபின்னரே ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு விஜேவீர கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரியவந்திருக்கின்றது. இதனால் பிரேமதாஸ கோபமடைந்ததாக அவருக்கு நெருங்கியவர்கள் தெரிவித்தனர். எனினும் பொதுமக்கள் நிம்மதிப்பெருமூச்சு விட்டனர். பட்டாசுகள் வெடித்தன.

—இந்தியா ருடே

## முரசொலிக்கு வந்த கடிதம்

### ஒழுங்கு விதிமுறைகள் ஏன்?

ஆசிரியர்
முரசொலி
ஐயா

இன்று அதுவும் குறிப்பாக யாழ்மாவட்டத்தில் மனிதர்கள் ஒழுங்காகவும், முறையாகவும் நடந்துசெல்ல பாதைகள் கூடசரியாக இல்லை எல்லாம் குன்றும் குழியும்தான் இது இப்படி இருக்க துவிச்சக்கர வண்டிகளும், இரண்டு சில்லு மோட்டார் வண்டிகளும், மோட்டார் கார்களும் எப்படி செல்லும் என்பதை எல்லோரும் அறிவார்கள். மோட்டார் வாகனம் செலுத்துபவர்களுக்கு தாம் நினைத்தபடி ஓட்டமுடியாதபடி சில ஒழுங்கு விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் இன்று யாழ்மாவட்டத்தில் மோட்டார்வாகனம் ஒட்டுபவர்களில் அனேகரிடம் தகுந்த சாரதி அனுமதிப்பத்திரம் கிடையாது.

இரண்டாவது விடயம் ஓர்வாகனம் முன்னால் செல்லும் பொழுது அதன் பின்னால் செல்லும் வாகனம் ஓட்டுனர், அவர் வண்டியை அவதானித்துத்தான் ஓட்டமுடியும். ஆனால் இங்கு 75 சதவீதம் வண்டிகளில் வண்டியின் பின்விளக்குகள் கிடையாது. இவை அனைத்தும் எல்லா மக்களையும் தொடர்ந்து பாதிக்கின்றன. சிக்னல் லைட் ஓர்வண்டிக்கு மிகவும் முக்கியம். அதேபோல் சையிட் கண்ணாடிகளும் கூட.

இதுபோன்ற விடயத்தினால் ஏற்படும் உயிர்சேதத்தினை சம்பந்தப்பட்டவர்கள் காப்பார்களா?

திருநெல்வேலி ஜெ. செல்வராஜா

---

### படகுச் சேவை மீண்டும் ஆரம்பம்

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானிற்குமான படகுச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் ஏ. சி. ராஜதுரை தெரிவித்துள்ளார். இப் படகுச் சேவை தினமும் காலை 9.00 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவிற்கும், பிற்பகல் 2 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானிற்கும் நடைபெறும் எனவும் அவர்தெரிவித்தார்,


பிரயாணம் பிரயாணம் பிரயாணம்

"M" Three Travel

வழங்கும் உடனடி பிரயாணம்

சவூதி அரேபியா, மாலைதீவு

★ சவூதி அரேபியா (Saudi Arabia)

| | | | வெற்றிடம் | |
|---|---|---|---|---|
| 1. | Equipment Operator (Heavy) (கனரக உபகரண இயக்குநர்) | 5 | 650 | S R. |
| 2. | Equipment Operator (Light) (கனம்குறைந்த உபகரண இயக்குநர்) | 5 | 500 | S R. |
| 3. | Irrigation Repairman | 4 | 350 | S.R. |
| 4. | Landscaping Foreman (Driver) | 6 | 550 | S.R. |
| 5. | Irrigation Foreman (Driver) | 6 | 550 | S R. |
| 6. | Landscaping Lerdman (Driver) | 14 | 450 | S.R. |
| 7. | Mason (மேசன்) | 2 | 450 | S.R. |
| 8. | A/C Technician | 4 | 1000 | S.R. |
| 9. | Diesel Technician (Generator Mechanic) | 4 | 900 | S.R. |
| 10. | Control Technician | 3 | 1000 | S.R. |
| 11. | Fire Alarm Technician | 3 | 1000 | S.R. |
| 12. | Electrician (Building) (கட்டிட மின் இணைப்பாளர்) | 10 | 750 | S.R. |
| 13. | Cleaners (சுத்திகரிப்பாளர்) | 50 | 325 | S.R. |

★ மாலைதீவு (Maltives)

தையல் உதவியாளர் பெண்கள் மட்டும் 70 U.S.D.
(ஒரு கிழமையில் பிரயாணம் மேற்கொள்ளலாம்)

★ Passport, Bond என்பன குறுகிய காலத்தில் செய்துகொடுக்கப்படும்

★ நம்பிக்கை ★ நாணயம்

என்பனவற்றிக்கு நீங்கள் நாடவேண்டிய தாபனம்

"M" Three Travel

தலைமை அலுவலகம்:
"இந்திரபவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல: 1, 2வது ஒழுங்கை
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

02002


# 60வயதுவரை சேவை செய்வதற்கு அரசாங்கஊழியர்களுக்கு அனுமதி

55வயதினை அடைந்த அரச ஊழியர் ஒருவரின் சேவை மேலும் தேவைப்படுமிடத்து 60 வயதுவரை தொடர்ந்தும் அவரை சேவையில் வைத்திருக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஒருவர் இளைப்பாறிய பின்னர் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்து, இவ்விதம் தொடர்ந்தும் சேவையில் வைத்திருக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அத்துடன் சேவை நீடிப்பு வழங்கும்போது தற்போது இருக்கின்ற நடைமுறைகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளும்போது அவரது ஓய்வூதியத்தினையும் வழங்க வேண்டும் எனவும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அரச ஊழியர்களின் சம்பளம் தனித்தனியாகவே கவனிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சி ஊழியர்களுக்கு
## ஓய்வூதியம் அலவுன்ஸ் வழங்க அமைச்சு தீர்மானம்

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் உறுப்பினர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் அலவுன்ஸை அதிகரிக்கவும், ஓய்வூதிய முறையை ஏற்படுத்தவும் அந்தந்த நிறுவனங்களுக்கு அவற்றின் நிதி நிலைமைக்கு ஏற்ப அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் யூ. பி. விஜேகோன் நகரசபை ஊழியர்சம்மேளத்தின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அலவுன்ஸ் அதிகரிப்பு, ஓய்வூதியமுறை போன்றவை பற்றிய திட்டம் ஒன்றை உள்ளூராட்சி மன்றங்களும் மாகாணசபை செயலாளர்களும் ஒன்றிணைந்து வழங்கலாம் என்றும் அமைச்சர் ஆலோசனை கூறினார்.

## 4500 புதிய வீடுகள் மன்னாரில் அமைக்கப்படும்

மன்னார் மாவட்டத்தில் இவ்வாண்டு 4500 புதிய வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றில் மூவாயிரம் வீடுகள் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய அகதிகளுக்கு வழங்கப்படும். எஞ்சிய ஆயிரத்து ஐந்நூறு வீடுகள் உள்ளூரில் இடம் பெயர்ந்த அகதிகளுக்கு பகிர்ந்து வழங்கப்படும். ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் இவ்வீடுகளை கட்டுவதற்கான நிதியை வழங்கும்.

இதுதவிர ஜனாதிபதியின் பதினைந்து லட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திலுள்ள 153 கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும் தலா இருவீடுகள் வீதம் கட்டப்படவுள்ளன.

### கலைவாணி நிர்வாகிகள்

கொற்றாவத்தை கலைவாணி சனசமூக புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. மா. கதிரமலை. உப. தலைவர்:- க. வேலும்மயிலும், செயலாளர்:- ஆ. தங்கரூபன். உப செயலாளர்:- இ. விவேகானந்தன் பொருளாளர்: செ. வீரபத்திரன். பதினொரு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### நோயாளருக்கு மீண்டும் பால்

(உடுப்பிட்டி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு தற்போது மீண்டும் பால் வழங்கப்பட்டு வருகின்றது.

பால்மாவின் விலையதிகரிப்பால் யாழ். சுகாதாரத் திணைக்களத்தால் பால் விநியோகம் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### தெல்லிப்பழையில் இலக்கிய ஒன்றுகூடல்

கலை இலக்கியக் களத்தின் 26 வது ஒன்றுகூடல் தெல்லிப்பழை திருமதி த. சிதம்பரநாதன் அவர்களது இல்லத்தில் பத்தாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது. பல தமிழறிஞர்கள் கலந்து கொள்ளவுள்ள இந்த ஒன்றுகூடலில் 'இலக்கண வித்தகர் இ நமசிவாய தேசிகருடன் ஒரு மாலைப்பொழுது' நிகழ்ச்சியும் இடம்பெறும்.

### ஓட்டுமடம் கலைவாணி நிர்வாகிகள்

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காப்பாளர் வி. சி, பரமநாதன். தலைவர் ச. மனோகரன், உபதலைவர் ச பன்னீர்ச் செல்வம், செயலாளர்: க. லோகநாதன். உப செயலாளர் பொ. ஜனகன், பொருளாளர்: சு. சண்முகம், நூலகர் க. தில்லையம்பலம்.

ஒன்பதுபேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### வல்வை உற்சவம்

(உடுப்பிட்டி)

வல்வை நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 31-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்தது மேற்படி உற்சவம் தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெறும்.

சப்பறத்திருவிழா ஏழாந் திகதி புதன்கிழமை இரவும், தேர்த்திருவிழா எட்டாம் திகதி பகலும், தீர்த்தத் திருவிழா ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலையும் நடைபெறவுள்ளன.

## சுவையான செய்திகள்

### கழுதைகள்மீது அலாதி பிரியம்

இங்கிலாந்து நாட்டில் பிரிக்ஸ்டோன் நகரில் பார்த்திலாயிட் என்ற மூதாட்டிக்கு அவரது சந்ததியை விட அவர் வளர்த்த கழுதைகள் மீதுதான் அலாதிப் பிரியம்போல் தெரிகிறது. அவர் தனது இறுதி நாளில் தன்னுடைய 55 லட்ச ரூபாய் சொத்தை மூன்று கழுதைகளைப் பராமரிக்கவும் மீதமுள்ள 25 லட்ச ரூபாய் சொத்தை தனது சந்ததியினர்க்குமாய் எழுதி வைத்தார்.

### புத்தகங்கள் கிலோ என்ன விலை

புத்தகங்கள் நிறுத்து விற்கப்படுகின்றன. பழைய புத்தகங்கள் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை சமீபத்தில் வெளியான புத்தம் புதிய புத்தகங்கள் இத்தாலியில் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை அதிகமாகப் பெருகிப்போக வந்தது கிலோ விலை இவ்வளவு என விலை நிர்ணயிக்கப்பட்டு அவை விற்கப்படுகின்றன. காய்கறிகளைப்போல் அன்றாடம் விற்பனையாவது எங்களுக்கு மகிழ்ச்சி தருகிறது என்கிறார்கள் கடைக்காரர்கள்.

### அவருக்கு யார் மனைவி?

'அவருக்கு குரங்குகளுடன் கொஞ்சவே நேரம் போதவில்லை, என்னை ஏறிட்டும் பார்ப்பதில்லை' என்று காரணம் காட்டி விவாகரத்துக் கோரி இருக்கிறார் இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு பெண்மணி. தனக்கு மாதாந்திர ஜீவனாம்சமாக 2000 டொலர் தரவேண்டும். அத்துடன் குடியிருக்கும் வீட்டையும் காலி செய்து கொடுக்க வேண்டும். கணவனோ அவரது வளர்ப்புக் குரங்கோ அவ்வீட்டின் பக்கம் திரும்பிக் கூடப்பார்க்கக் கூடாது என்பதும் அவரது கோரிக்கையாகும். இவ்வழக்கு இப்போது டெல் அவிவ்வில் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

### பாம்பு ஆராய்ச்சிக்குஒருகல்லூரி

பிரேசில் நாட்டிலுள்ள சாவ்போலோ நகரத்தில் பாம்பு ஆராய்ச்சிக்கென ஒரு கல்லூரி இருக்கிறது. ஆபத்தின்றிப் பாம்புகளைப் பேணிப்பாதுகாப்பது எப்படி? பாம்புகளிடமிருந்து விஷம் பெறுவது எப்படி? என்பது பற்றியெல்லாம் இங்கு சொல்லித்தருவார்கள். அலுவலகங்களில் பைல்களைப் பராமரிப்பது எப்படி என்று ஒரு கோர்ஸ் நடத்தி டிப்ளோமாவும் வழங்குகிறார்கள் அமெரிக்காவில். இது எப்படி?

## முரசொலி
## தமிழாய் ஒளிரட்டும்!

மக்கள் முரசு மரிப்பதில்லை – அது
மண்ணில் ஒலிக்க மறப்பதில்லை
சிக்கல் பலிந்த அவத்தினிலும் – கலைச்
சங்கம் வளர்க்க மறுப்பதில்லை!

✶

மீண்டும் தொடங்கும் மிடுக்கென்ற – தனி
மூர்க்கம் தமிழன் மரபென்று
நீண்டு நிலைக்கும் நெறிநாடி – எதிர்
நீச்சல் அடித்து விடிவெய்துவோம்!

★

உண்மை நேர்மை உரிமையால் – விரி
உலகை அளந்து பொருள் கண்டு
புன்மை நீக்கி புதுமையில் – எரி
பகைமை விலக்கி சுகங்கொள்வோம்!

✶

சந்திக் குயிலின் குரலாக – தினம்
சிலம்பும் ஒலிகள் மலரட்டும்
அந்திப் பொழுதே அமையாத – சுடர்
அரங்கம் தமிழாய் ஒளிரட்டும்!

மாவை- வரோதயன்

# மத்தியதர வகுப்பினருக்கென 5000 வீடுகள் கட்டப்படும்

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் மத்தியதர வகுப்பினருக்கு வீடுகள் அமைக்கும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி - திரு.ஆர்.பிரேமதாஸவின் குறுகியகால திட்டத்தின் கீழ இந்த வீடமைப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் சுமார் ஐயாயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் நேரடிவழிகாட்டலின்கீழ் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு பி.சிரிசேன குரே இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டுள்ளார்.

### அரிசி, மா ஆகியவற்றை
# தனியார் துறையினரும் இறக்குமதி செய்ய அனுமதி

தனியார் துறையினர் அரிசி, மா போன்றவற்றை இறக்குமதிசெய்ய அனுமதிக்க அரசு தீர்மானித்துள்ளது. நாட்டின் அரிசி உற்பத்தியைப் பாதிக்காதவகையில் இவ்வனுமதி வழங்கப்படும் என வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சர் ஜனப் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைச்செலவு தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இதற்கு பொருட்களின் விலை அதிகரிப்பே காரணம் எனவும் வர்த்தக கப்பற்றுறை அமைச்சே இந்நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டுமென வும் கூறப்படுகிறது.

பொருட்களின் விலையினை அதிகரிப்பது தனியே எமது அமைச்சுடன் மட்டுமன்றி, பல அமைச்சர்களுடனும் தொடர்புடையது. எமது அமைச்சின் கடமை உணவுப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி இறக்குமதி செய்வதே எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தனியார் துறையினர் இறக்குமதி செய்ய அனுமதிப்பது மேலும் பொருட்களின் விலை ஏற்றத்திற்கே வழிவகுக்கும் எனவும் பாவனையாளர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.


## தொழில் கல்விகள்

Radio - TV and Deck
Air Condition and Refrigeration
House Wiring
Motor Winding
and
Motor Mechanism

புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 9 - 2 - 1990
பதிவுகட்கு

North Ceylon Technical Institute

14, St PETERS LANE
Hospital Road, Jaffna.

02007


### ✶ பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சொல்கிறார்
# இரு நாடுகளுக்கும் இடையிலான பூசலைத் தீர்க்க இந்தியாவின் அக்கறை எமக்கும் உண்டு

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பூசலை நிவர்த்தி செய்திட இந்தியா எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளதோ அதே அளவு ஆர்வமும் அக்கறையும் பாகிஸ்தானுக்குமுண்டு என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. யாக்கூப்கான் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் வைத்து செய்தி நிருபர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். பாகிஸ்தானில் இராணுவம் உஷார் நிலையில் வைககப்பட்டுள்ளது என்ற கூற்றையும் அவர் மறுத்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகளைக் களைய தகவல் தொடர்வு மார்க்கமொன்றை பராமரித்து வருவது மிகவும் பொருத்தமானதாக அமையும் எனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதேவேளை பாகிஸ்தான் வசம் ஆறு அணுகுண்டுகள் இருப்பதாகவும், அணுவாயுதக்கருவிகள் தயாரிப்பதில் அந்நாடு முனைப்புடன் ஈடுபட்டு வருவதாகவும், புதிய அணுவுலைகளை அமைப்பதிலும் பாகிஸ்தான் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. அமெரிக்காவில் வெளியாகும் உலகச் செய்திகள் குறித்த சஞ்சிகையொன்று இது பற்றிய விடயங்களைத் தெரிவித்துள்ளது. பதினெட்டு மாதங்களுக்கு முன்னர் முதலாவது அணுகுண்டை பாகிஸ்தான் பரிசோதனை செய்து பார்த்ததாகவும் அந்த சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# கம்யூனிஸ்ட் கட்சியை சீரமைக்க மாஸ்கோவில் மாபெரும் கூட்டம்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டுமெனக் கோரி நேற்று முன்தினம் சுமார் இரண்டு லட்சம் சோவியத் மக்கள் கூட்டமொன்றை நடாத்தினர்.

1920 -ம் ஆண்டுக்குப் பிறகு மாஸ்கோவில் நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற கூட்டங்களில் இதுவே மிகப்பெரியது என நிருபர்கள் விவரிக்கின்றனர்.

சீர்திருத்தவாத குழுக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தின் போது மாபெரும் ஊர்வலம் ஒன்றும் நடாத்தப்பட்டது.

### புதிய பிரதமரின் அறிவிப்பு
# கம்யூனிஸ்ட் அல்லாதோருக்கும் பல்கேரிய அரசில் பங்கு

பல்கேரியாவில் அரசாங்க அமைப்பை விரிவு படுத்தி கம்யூனிஸ்ட் அல்லாதவர்களையும் அதில் சேர்த்துக்கொள்ளப் போவதாகப் பல்கேரியாவின் புதிய பிரதமரான அன்றியோ லுக்கானோ தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை புதிய பிரதமராக பதவியேற்ற திரு. லுக்கானோ நாட்டில் தற்போது நிலவும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை தளர்த்தப்போவதாகவும் அறிவித்துள்ளார். இத்துடன், தமது அரசில் விவசாயிகளின் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்கப்படும் எனவும் சொன்னார்.

## வேலணையில் சமய தீட்சை

வேலணை மேற்கு முடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் குழந்தைகளுக்கும், முதியோருக்கும் எதிர்வரும் எட்டாம் திகதி தைப்பூசத்தினத்தன்று சமயதீட்சை வழக்கப்படவுள்ளது. சமயதீட்சை பெறவிரும்புவோர் வேலணை சைவசேவாசங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### தையல் இயந்திர...
3-ம் பக்கத் தொடர்ச்சி...

கொண்டு சென்றனர்.

விஜேவீர அரசியல் பற்றி என்றுமே தனது மனைவியுடன் உரையாடியதில்லை. தனது பிள்ளைகளில் தனது ஒரு மகனையே அவர் அதிகமாக நேசித்தார். இருதயநோயாளியான இவர் 1983 -ம் ஆண்டிலிருந்து வைத்தியர்கள் கூறிய மருந்துகளையே கைது செய்யப்படும் வரை பாவித்து வந்திருக்கின்றார்.

ஒருமுறை இவரின் மகள் சிறுநீரகக் கோளாறு காரணமாக பதுளை வைத்தியசாலையில் இருந்தபோது ஜே. வி. பியின் ஹர்த்தாலினாலேயே வைத்தியசாலை ஸ்தம்பித்தது. இதனால் மகளை விஜேவீர வீட்டுக்கு கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

விஜேவீரவின் பிள்ளைகளுக்கு இன்றுவரையும் அவர் யார் என்றும் இவரின் தொழில் என்ன என்றும் தெரியாது. அவர் இராணுவத்தால் கைது செய்யப்படும் வேளைகூட பிள்ளைகள் ஒன்றுமறியாது மிரள விழித்துக் கொண்டு நின்றனர். இதைக்கண்ட இராணுவவீரர் ஒருவர் "பயப்படாதீர்கள் உங்கள் அப்பா திரும்பி வருவார்" என்றார் ஆனால் அவர் திரும்பி வரவேயில்லை.

(நன்றி ரைம்ஸ்)


## அறிவித்தல்

ஈழமுரசு பத்திரிகையில் கடமையாற்றிய ஊழியர்கள் தொடர்ந்து கடமையாற்ற விரும்பினால் 12-02-90 காலை 9.00 மணிக்குக் காரியாலயத்திற்கு வரவும்.

## பொறுப்பாளர் தேவை

மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள கிளை அலுவலகங்களுக்கு நிர்வாகஸ்தர்கள் தேவை. 12-02-90 காலை 9.00 மணிக்குக் காரியாலயத்திற்கு வரவும்.

## தேவை

நிருபர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்புநோக்குநர், அச்சுக்கோப்பாளர்கள், லிகிதர்கள், தட்டெழுத்தாளர்கள் (தமிழ்/ஆங்கிலம்) ஆகிய பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலார்களும் 12-02-90 காலை 9.00 மணிக்குச் சான்றிதழ்களுடன் காரியாலயத்திற்கு வரவும்.

31, வைமன் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

02026

பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரி மாணவர்களுக்கான
## விரைவுபடுத்தப்பட்ட விரிவுரைகள்

1988 டிசம்பர் கலைமாணி (B.A)
1988 டிசம்பர் விஞ்ஞானமாணி (B.Sc)
1989 ஏப்ரல் கலைமுதற் தேர்வு (G.A.Q)
1989 ஏப்ரல் விஞ்ஞான முதற்தேர்வு (G.S.Q)

மாணவர்களுக்கான விரைவுபடுத்தப்பட்ட விரிவுரைகள் 10.2.90 ல் ஆரம்பமாகின்றன

(பரீட்சைகள் யாவும் ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறுமென பேராதனைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது)

விபரங்கட்கு
உதவிப்பதிவாளர்
## பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

02017

# வானொலி, தொலைக்காட்சி போலி லைசென்ஸ் புழக்கம்

இந்த வருட வானொலி தொலைக்காட்சி உத்தரவுப்பத்திரங்கள் பெறுவதற்காக 89 ஆம் ஆண்டு உத்தரவுப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டபோது பல போலி உத்தரவுப்பத்திரங்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உத்தரவுப் பத்திரங்களைப் பெறும்போது அஞ்சல் அலுவலகத்திலும் மற்றும், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலும் மட்டுமே பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கிளிநொச்சியில் இட ஒதுக்கீடு

கிளிநொச்சி பட்டினசபை அரச அலுவலகங்களை புதிதாக அமைப்பதற்காக காணிகளை ஒதுக்கியுள்ளது. கிளிநொச்சி டஸ்நிலையத்திற்கும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கும் இடைப்பட்ட வீதியோர காணிகளே இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்காணிகளில் பொலிஸ் நிலையம், பூங்கா, இலங்கை வங்கி போன்ற பலஅரச கட்டிடங்கள் அமைக்கப்படவுள்ளன.

## ஆட்டோ...

நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விடுதலைப் புலிகளுக்கும் மினி பஸ் உரிமையாளர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டன...

கலந்துகொண்டுவிட்டு திரு. கிட்டு லண்டன் புறப்பட்டுச் சென்றது வாசகர்கள் அறிந்ததே.

திரு. கிட்டு தனது காலை இழந்ததின்பின்னர் செயற்கை காலொன்றைப் பொருத்தியிருந்தார். பொருத்தப்பட்ட இந்த செயற்கைக்கால் இவர் சென்னையில் இந்தியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட போது விட்டுவிட்டார். தடுப்புக்காவலில் இருந்து பின் யாழ்ப்பாணத்தில் விடுதலை செய்யப்பட்ட போது ஊன்றுகோலுடனேயே திரு. கிட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உடற்கல்வி சேவைக்காலபயிற்சி

மருதனமடம் கோட்டக் கல்விப் பிரிவைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி இம்மாதம் 13, 14ஆம் திகதிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

## விடுதலைப்புலிகள்...

மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை பகுதிகளில் நடைபெற்ற பிரச்சினையைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் சந்தித்து உரையாடியபின்பே இவ்வாறு அரசு அறிவித்துள்ளது.

மாறாக விடுதலைப் புலிகளோ ஒரு இந்திய இராணுவவீரரேனும் இலங்கையில் இருக்கும் வரை ஆயுதங்களை வைக்கப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்துள்ளது என பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும்...

நூறு குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இருநூறு குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ள இந் நிவாரணக் கொடுப்பனவு வேலைகள் விரைவாக நடைபெற்றுவருகின்றன இவ்வேலைகள் அடுத்த வாரத்தினுள் முடிவடைந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமென யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


## தவறிவிட்டது

யாழ் - பலாலி மினி பஸ்ஸில் திருநெல் வேலிக்கும் உரும்பராய்க்கும் இடையில் நேற்று முக்கிய இயந்திர பாகங்கள் கொண்ட பெட்டி ஒன்று தவறிப் போய்விட்டது. கண்டெடுத்தோர் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### கோல்ட்ஸ் இன்டஸ்ரி

அரசடி வீதி

(கற்பகப் பிள்ளையார் கோவில் சமீபமாக)

உரும்பராய்

02030



## நன்றி நவிலல்

### அமரர் முருகேசு சின்னத்தம்பி

(இளைப்பாறிய அதிபர் யா/வீரசிங்கம் மகாவித்தியாலயம் (மீசாலை)

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய ஸ்தாபர்களில் ஒருவரும் மேற்படி பாடசாலையில் 42 வருடகாலமாக அதிபராக கடமை புரிந்து ஓய்வு பெற்றவருமாகிய எமது குடும்பத் தலைவர் தனது 86-வது வயதில் 26-1-1990 அன்று சிவபதமடைந்தபோதும் 27-1-90 அன்று நடைபெற்ற இறுதி கிரியைகளிலும் கலந்து கொண்ட உறவினர்கள் நண்பர்கள் பழைய மாணவர்கள் அனைவர்க்கும் எமது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

''குடும்பத்தினர்''

02019


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ்[பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 6-2-90 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# புழுங்கல் அரிசி கிலோ பத்து ரூபாவிற்கு விற்க அமைச்சு நடவடிக்கை

ஒருகிலோ புழுங்கல் அரிசியைப் பத்து ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இம்மாத இறுதிக்குள் இது நடைமுறைப்படுத்தப்படுமென வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஒருகிலோ புழுங்கல் அரிசியை ஏழு ரூபா அறுபது சதத்திற்கு விற்பனை செய்ய பாகிஸ்தானும் வியட்நாமும் இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இருநாடுகளிலும் இருந்து அடுத்த வாரம் இலங்கைக்கு அரிசி வந்தடையுமென உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் இம்மாத இறுதிக்குள் அரிசியின் விலை முப்பத்துஐந்து சதவீதமாக குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரிசியின் விலையைக் குறைப்பதன்மூலம் நடுத்தர மற்றும் ஏழைமக்கள் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வட கிழக்கு,...

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு அருட்செல்வி மரியகொரட்டி, எஸ். இராமுப்பிள்ளை ஆகியோரும் வவுனியா மாவட்டத்திற்கு எஸ். விஸ்வலிங்கம், ஆர். ராஜேந்திரா, திருமதி எஸ். சிவநாதன் ஆகியோரும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்.

மற்றும் யாழ்ப்பாணமாவட்டத்தில் இருந்து திருகோணமலை மாவட்டத்திற்கு திருமதி எம், சிங்காரவேல், கே. குலசபாநாதன் ஆகியோரும் மன்னார் மாவட்டத்திற்கு செல்வி ஜி. திருநாவுக்கரசு, திருமதி எல். எஸ். கதிர்காமர் ஆகியோரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு செல்வி ஜே, எஸ். பஸ்தியாம்பிள்ளையும் இடமாற்றம் பெறுகின்றார்கள்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு திருகோணமலையில் இருந்து திருமதி பி. எம். புகாரியும், மூதூரில் இருந்து எஸ். இளையதம்பியும், கல்முனையில் இருந்து எஸ். எஸ். எம். அஸாமும், யாழ்ப்பாணத்தில் இருந்து திருமதி எம். ஈ. ஜோசப், திருமதி பி. அருள் அன்னராஜா ஆகியோரும் இடமாற்றம் பெறுகின்றார்கள்.

திருமதி எஸ். மனோரஞ்சிதம், பி. யோகேந்திரன் ஆகியோர் மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்கும். திருமதி வி. ரட்ணராஜ் மட்டக்களப்பில் இருந்து அம்பாறைக்கும் இடமாற்றம் பெறுகின்றார்கள்.

## இரசாயனத் தொழிற்சாலை ஏப்ரல் முதல் இயங்கும்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன தலைவர் திரு. உபாலி டி. சில்வா அண்மையில் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்திருந்தார்.

தொழிற்சாலையில் பல பிரிவுகளையும் பார்வையிட்ட திரு. உபாலி டி. சில்வா ஊழியர் மத்தியில் தமிழில் உரையாற்றினார்.

முழு இலங்கைக்கும் குளோரின் கோஸ்டிக் சோடா தயாரிக்கும் ஒரே இரசாயன தொழிற்சாலை இதுவெனவும் இதனை மீண்டும் இயங்கச் செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதையடுத்தே தாம்இங்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான குளோரினை இறக்குமதிசெய்ய வருடத்திற்கு மூன்று கோடி ரூபா செலவாகிறது எனவும் தொழிற்சாலையை இயங்கச் செய்வதன் மூலம் அந்நிய செலாவணியை மீதப்படுத்த முடியும் எனவும் திரு. உபாலி டி. சில்வா குறிப்பிட்டார்.

## புதிய நிதியொதுக்கீட்டில் கட்டிடங்களை அமைக்கத்தடை

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில்புதிதாக ஒதுக்கப்பட்ட நிதியில் புதிய கட்டிடங்களை அமைக்கவோ வாகனங்களை கொள்வனவுசெய்யவோ முடியாது என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வீண்விரையங்களும் ஆடம்பர செலவினங்களும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவு ஜனாதிபதியினால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை முதல்வர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## காங்கேசனதுறையில்...

இந்த அசம்பாவிதத்தினைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியதாயினும் மாலையே நிலைமை வழமைக்குத் திரும்பியது.


உ

நல்லூர்க்கந்தன் துணை

## திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர் !

நிகழும் சுக்கில வருடம் தை மாதம் 25ந் திகதி [7 - 2 - 1990] புதன் கிழமை முற்பகல் 8 48 மணி தொடக்கம் 10.30 மணிவரையும் அமைந்துள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எனது புதல்வன்<br>திருநிறை செல்வன்<br>**கிரிஷாந்தகுமார்**<br>அவர்கட்கும் | எனது புதல்வி<br>திருநிறை செல்வி<br>**வளர்மதி**<br>அவர்கட்கும் |

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்துவைக்க நல்லூர்க்கந்தப் பெருமானின் திருவருள் பாலித்துள்ளது இத்திருமணவிழா வைபவத்திற்கு குடும்பசமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தருளும் வண்ணம் எங்கள் நண்பர்களையும் சுற்றத்தவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தவமணி அருணாசலம்
சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

திருமதி பத்மாசனிதேவி கனகரத்தினம்
77, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

அவ்வண்ணமே தங்கள் வருகையை நாடும்
சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம்
கேணியடி, திருநெல்வேலி.